www.padippakam.com

# கடல் கடந்த தொழிலாளி

அக்டோபர்-டிசம்பர் 2002 தனிச்சுற்றுக்கு மட்டும் - இலவச வெளியீடு இதழ்:3

## தாய்லாந்தில் வாடும் பர்மிய அகதிகள்



## இங்கிலாந்து அரசு தமிழர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்!

-டாக்டர் இராமதாஸ்

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் பக்கம்...

நான் கடந்த அக்டோபர் மாதம் 4ஆம் நாள் தாய்லாந்து நாட்டில் மாய்சோட் என்ற இடத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கிற்கு கலந்து கொள்வதற்காக பாங்காக் என்ற நகரத்திலிருந்து மாய்சோட் என்ற நகரத்திற்கு இரவு நேரம் பஸ்ஸில் சென்று கொண்டு இருந்தேன். எனவே அனைவரும் உறங்கிக் கொண்டிருக்கும்போது நான் மட்டும் தூக்கமில்லாமல் விழித்துக் கொண்டு இருந்தேன்.

பஸ் மாய்சோட் என்ற நகரத்தை அடைவதற்கு ஒரு சில கிலோமீட்டர்களுக்கு முன்னால் போலீசாரால் சோதனை செய்வதற்காக நிறுத்தப்பட்டது. பஸ்ஸில் ஏறிய ஒரு போலீஸ்காரர் அனைவரிடமும் அடையாள அட்டை கேட்டார்.. அனைவரும் தங்களது அடையாள அட்டையை காட்டினர். நானும் என்னுடைய பாஸ்போர்ட்டை காட்டினேன். என் இருக்கைக்கு பின்னாலும் அருகிலும் இருந்த 6 நபர்களிடம் (4 பெண்கள் உட்பட) எவ்வித அடையாள அட்டையும் இல்லாத காரணத்தால் அவர்களை பஸ்ஸை விட்டு கீழிறக்கி முழங்கால் இடச்செய்து நடக்கவிட்டு கூட்டிச்சென்றனர். ஏன் இந்த அவலம்? என விசாரித்தபோதுதான் தெரிந்தது- அவர்கள் 6 பேரும் பர்மா நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் முறையான ஆவணங்கள் இல்லாமல் தாய்லாந்துக்குள் தொழிலாளர்களாக நுழைந்துள்ளனர் என்றும்.

என்னதான் முறையான ஆவணங்கள் இல்லாமல் இருந்தாலும் அவர்களை முழங்காலிடச் செய்து நடக்கச் சொல்வதா? இது மனித உரிமை மீறல் இல்லையா? ஏன் இப்படி துன்பப்படுத்த வேண்டும்?

இதுபோன்ற கேள்விகள் எழாமல் இருக்க சர்வதேச தொண்டு நிறுவனங்களும், ஐ.நா. சபையின் மனித உரிமை அமைப்புகளும், அரசுகளும் சேர்ந்து செயல்படவேண்டும்.

அன்புடன்,
*ஜே.பால்பாஸ்கர்*

ஆசிரியர்:
**ஜே.பால்பாஸ்கர்**

உதவி ஆசிரியர்:
**செந்தில்வேல்**
0451-410021

சென்னை தொடர்பாளர்:
**இராமச்சந்திரன்**
044-4348922

இணையத்தில் படித்திட...
www.pasumaiulagam.com

மின்னஞ்சல்:
peacetrust@vsnl.com



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...

**இந்தியா:**

இங்கிலாந்து அரசு
தமிழர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்! 04

**குவைத்:**

கொடுமைப்படுத்தப்பட்ட தமிழர் 09

**இலங்கை:**

வெளிநாடுகளில் வீட்டுவேலை செய்யும்
தொழிலாளர்களின் மண்டல உச்சி மாநாடு 09

வெளிநாட்டில் வேலைசெய்யும்
பெண்களின் துயர நிலை 13

**மலேசியா:**

சிறைக்கொடுமைக்குப் பலியான இந்தியர் 14

மலேசியாவிற்கு
அதிகத் தொழிலாளர்கள் தேவையா? 15

போதைப்பொருள் விற்ற தொழிலாளி 16

சொல்லப்பட்ட ஊதியம் இல்லை!
இந்தியத் தூதரகத்தில் புகார் 17

**பிலிப்பைன்ஸ்:**

எச்.ஐ.வி. பாதிப்பில் இளம் பெண்கள் 18

**சவுதி அரேபியா:**

தொழிலாளர் உரிமைக்கு
ஆதரவாக மதகுரு பேச்சு 19

**தென்னாப்பிரிக்கா:**

நினைவில் நின்ற காட்சி 20

இந்தியர்களின் அடிமை கோலம் 22

**தாய்லாந்து:**

பர்மிய தொழிலாளர்களின் சோகம் 25

குடிபெயர் தொழிலாளர் ஆசியக் கருத்தரங்கம் 30



படிப்பகம்

www.padippakam.com

# இங்கிலாந்து அரசு தமிழர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்!

**-டாக்டர் இராமதாஸ்**

இங்கிலாந்து அரசு காலனி செய்த நாடுகளில் 150 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இருந்து கடினத் தொழிலாளிகளாக ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் நிலையை நாம் பார்த்தோமானால் 21-ஆம் நூற்றாண்டிலும் அவர்களின் சந்ததியினர் தங்களின் மொழியை இழந்தும் வறுமையில் ஆட்பட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை பார்க்கும் போது மனம் வருத்தமடைகிறது.

ஒருகாலகட்டத்தில் தமிழர்கள் வாணிபம் செய்யாத நாடுகள் இல்லை. பாண்டிச்சேரியில் வரலாற்றுச் சிறப்புமிக்க அரிக்கமேடு (அரியாங்குப்பம்) என்ற பகுதியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அணிகலன்கள் செய்வதிலும், வைரக்கற்களை அறுத்து பட்டை தீட்டுவதிலும் தமிழர்கள் கைதேர்ந்து விளங்கியிருக்கிறார்கள். அணிகலன்களை உலகம் முழுவதிற்கும் ஏற்றுமதி செய்து பெரும் செல்வம் ஈட்டியிருக்கின்றார்கள். அரிக்கமேடு உலகத் தமிழர்கள் அனைவரும் பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடியதாகும். அரிக்கமேடு உலகத் தமிழர்கள் அனைவரையும் இணைக்கும் மெக்கா என்று கூறினாலும் மிகையாகாது.

அப்படி பெருமையோடும் சீறும் சிறப்போடும் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வில் இங்கிலாந்து பேரரசு தங்களின் காலனி ஆதிக்கத்தை நுழைத்தது. தமிழர்களை அடிமையாக்கியதோடு மட்டுமின்றி அவர்களது தைரியத்தையும் உடல் வலிமையையும் தங்களின் பொருளாதார உயர்விற்கு பயன்படுத்திக் கொண்டார்கள். உலகம் முழுவதிலும் தங்களது காலனியாதிக்க நாடுகளில் தமிழர்களை ஏமாற்றி அழைத்துச் சென்று காடுகளை அழித்து விவசாய நிலமாக மாற்றினார்கள்.

தமிழர்கள், இலங்கைக் காடுகளை தேயிலைத் தோட்டமாக்கினார்கள். மலேசியா காடுகளை அழித்து தேயிலைத் தோட்டங்களாகவும் மற்றும் இரப்பர் தோட்டங்களாகவும் மாற்றினார்கள். மலேசியா, தாய்லாந்துக்கிடையே இரயில் பாதை அமைக்கும்போது இறந்துபோன தமிழர்கள் ஏராளம். இந்த இரயில் பாதையை மரண இரயில் பாதை என்றே அழைக்கிறார்கள். பிஜி தீவுகளில்



படிப்பகம்

www.padippakam.com

கரும்புத் தோட்டங்களை உருவாக்கினார்கள். தென்ஆப்பிரிக்காவில் காடுகளை மாற்றி வாழைத் தோப்புகளையும் கரும்புப் பண்ணைகளையும் உருவாக்கிக் காட்டினார்கள். தென்னமெரிக்கா நாட்டிலுள்ள கயானா மற்றும் சூரினாம் நாடுகளில் பரந்துவிரிந்த அமேசான் காடுகளை அழித்து கரும்புத் தோட்டங்களை உருவாக்கினார்கள்.

இப்படியாக தமிழர்களின் கடின உழைப்பில் உருவான பணப்பயிர்களின் வாயிலாக இங்கிலாந்து பேரரசு தங்களது நாட்டை பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொண்டது. ஆனால் தமிழர்களுக்கோ எந்த பயனும் இல்லை. ஆயிரக்கணக்கான தமிழர்கள் அந்நிய நாட்டு காடுகளில் விலங்கினங்களுக்கு இரையாகியும், மலேரியா நோய்களுக்கு ஆளாகி மடிந்தும், கொடும் நச்சுடைய பாம்பு, தேள் கடிபட்டு மருத்துவ வசதியின்றி உயிரிழந்தது தான் மிச்சம்.

எங்கு செல்கின்றோம் என்று தெரியாமல் கப்பல்களில் ஏற்றப்பட்ட தமிழர்களில் ஆயிரக் கணக்கானோர் பல மாதங்கள் நீண்ட கடற்பயணத்தின் காரணமாக நோய்கண்டு மடிந்திருக்கின்றனர். இலட்சக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தங்கள் சொந்தங்களை பிரிந்து சிதறிவிட்டன.

தமிழர்கள் இப்படி உயிர்விட்டு உழைத்து ஒவ்வொரு நாட்டையும் உருவாக்கியிருந்தாலும் இன்று அந்தந்த நாடுகளில் வாழும் அவர்களுடைய சந்ததியினர்களை எந்த நாடும் மரியாதையாகவும் பாசமோடும் நடத்துகின்றதா என்று பார்த்தால், இல்லை என்றே கூறலாம். அருகேயுள்ள இலங்கையில் தமிழர்கள் கள்ளத்தோணிகள் என்று துரத்தியடிக்கப்பட்டு கட்டிய துணியோடு தமிழகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அடைக்கலம் தேடிவந்த அவர்கள் அவமானப் பட்டு கூனிக்குறுகி நின்றது நம் அனைவருக்கும் தெரியும். பர்மா, தமிழர்களை அவர்களது சொத்துக் களை எல்லாம் பிடுங்கிக் கொண்டு, துரத்தியதை நாம்





படிப்பகம்

www.padippakam.com

அறிவோம். உதவி தேடி அநாதைகளாக இந்தியாவிற்கு ஓடிவந்த ரங்கூன் தமிழர்கள் எதிர்பார்த்த உதவிக்கிட்டாமல் அடங்கிப் போனார்கள்.

பிஜித் தீவுகளில் தமிழர்கள் இருந்த வரலாறே இல்லாமல் அழித்துவிட்டது பின்னாளில் ஆட்சி செய்த அரசுகள். அடக்குமுறையால் தாங்கள் தமிழர்கள் என்று சொல்வதற்கே கூச்சப்பட்டு தங்களது பெயர்களை வட இந்தியப் பெயர்களாக மாற்றிக்கொண்டது மிகவும் வேதனையான ஒன்று. தென்னாப்பிரிக்காத் தமிழர்கள் நிறவெறி அரசுகளின் பிடியில் சிக்கி சிதறுண்டது போதாமல் இன்று அவமானப்பட்டும் உயிருக்கு எந்தவித உத்தரவாத மின்றியும் நாள்தோறும் கொல்லப் பட்டு வரும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களை எண்ணிப் பார்த்தால் வேதனையே மிஞ்சுகிறது. தென்னாப்பிரிக்கா விடுதலைக்காக 27 ஆண்டுகள் சிறையிலிருந்த நெல்சன் மண்டேலாவுடன் அதே விடுதலைக்காக சீனி முதலி, முனுசாமி படையாச்சி போன்ற பல தமிழர்கள் ராபின் தீவு சிறையில் அடைபட்டு கிடந்தது எதற்காக? பின்னாளில் இப்படி அவமானப்படுவதற்காகவா?

கயானா நாடுகளில் வாழும் இலட்சக்கணக்கான தமிழர்கள் கறுப்பர் தேசமுன்டு ஆட்சியில் பலவந்தமாக கறுப்பர்களுடன் மணமுடிந்து வைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். இன்றும் அந்த அவமானத்தில் பிடியில் இருந்து அகல முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களை மற்ற இந்தியர்களே அருவருப்பாக பார்க்கும் நிலையில் நம் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருப் பதைப் பார்க்கும் போது வருத்தமாக இருக்கிறது.

அதுமட்டுமின்றி இன்று மலேசியா, இலங்கை நாடுகளில் வாழும் தமிழ் சந்ததியினரைத் தவிர தென்னாப்பிரிக்கா, கயானா, சூரினாம், மேற்கிந்திய தீவுகள், பிஜித் தீவுகள் போன்ற நாடுகளில் வாழும் கிட்டத்தட்ட பதினைந்து இலட்சம் தமிழர்கள் அனைவரும் தங்களது மொழியை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.

அமைதியாகவும் சிறப்பாகவும் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களின் வாழ்க்கையை தங்களின் பொருளாதார உயர்விற்கு மட்டும் பயன்படுத்திக்கொண்ட இங்கிலாந்து அரசு இலட்சக்கணக் கான தமிழர்களின் குடும்பங்கள் சிதறுண்டு போனதற்கும், பல நாடுகளில் தங்களது குடும்பங் களைப் பிரிந்து உயிரிழந்த தமிழர்களின் மரணத்திற்கும் காரணமாகிறது. இதற்கு பொறுப்பேற்றுக்கொண்டு, இங்கிலாந்து இராணியார் தமிழ்ச் சமுதாயத்திடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

●●●●

**அமைதியாகவும் சிறப்பாகவும் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களின் வாழ்க்கையை தங்களின் பொருளாதார உயர்விற்கு மட்டும் பயன்படுத்திக்கொண்ட இங்கிலாந்து அரசு இலட்சக்கணக் கான தமிழர்களின் குடும்பங்கள் சிதறுண்டு போனதற்கும், பல நாடுகளில் தங்களது குடும்பங் களைப் பிரிந்து உயிரிழந்த தமிழர்களின் மரணத்திற்கும் காரணமாகிறது. இதற்கு பொறுப்பேற்றுக்கொண்டு, இங்கிலாந்து இராணியார் தமிழ்ச் சமுதாயத்திடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.**

●●●●

சமீப காலங்களில் இங்கிலாந்து இராணியார் தனது பேரரசு முன்னாளில் பூர்வீக குடி மக்களுக்கு இழைத்த கொடுமை களுக்கு மன்னிப்பு கோரி வருவது போல் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்கும் உலகறிய மன்னிப்பு கேட்க வேண்டும். அதுமட்டுமின்றி அந்த உழைத்த தமிழர்களுக்காகவும் இறந்துபோன தமிழர்களுக்காகவும் இலண்டன் நகரத்தில் இங்கிலாந்து அரசாங்கம் தமிழர்கள் செய்த தியாகங்களை நினைவு கூறும் வகையில் உடனடியாக ஒரு நினைவுச் சின்னத்தை அமைக்க வேண்டும்.

இதன் மூலம் தமிழர்களின் தியாகத்தை உலகம் அறிந்து கொள்ளும். அதுமட்டுமின்றி உலகம் முழுவதும் வாழும் தமிழ் சமுதாயத்தினருக்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் அவர்களின் பெருமையை அறிவதன் மூலம் தமிழ் மக்களை மரியாதையுள்ள குடிகளாக நடத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

உலகில் வாழும் அனைத்து தமிழர்களும் ஒருங்கிணைந்து அந்தந்த நாட்டில் உள்ள இங்கிலாந்து தூதரகத்தின் வாயிலாக இந்த கோரிக்கையை இங்கிலாந்து இராணியார் முன் வைப்பதற்கு பாடுபட வேண்டும்.

Dr. Ramdoss, is a social reformer and a Tamil leader.He is founder leader of Pattali Makkal Katchi (PMK) a political party from Tamilnadu and Pondicherry.He is atriculating on the plight of Tamil people living in former British regime.

He argues Tamils were taken to these countries to work and they had suffered a lot in a new situation. He appeals to British government to recognise their contribution and honour them.

British government when failed to protect Tamil people`s interest and instrumental in leaving them in slave like conditions must also apoligise to the world Tamil Communities.



படிப்பகம்

www.padippakam.com

குவைத்:

# கொடுமைப்படுத்தப்பட்ட தமிழர்

தமிழகத்தில் மன்னார்குடி அருகே ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் குமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இவருக்கு வயது 40. இவருக்கு திருமணம் முடிந்து 3 குழந்தைகள் உள்ளனர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் கடந்த 1995-ம் வருடம் பணம் அதிகம் சம்பாதிக்கும் நோக்கத்தில் குவைத் நாட்டிற்கு ஒரு ஷேக் வீட்டில் டிரைவராக பணிபுரிய சென்றார். இதற்காக இவர் தமிழகத்தைச் சேர்ந்த டிராவல் ஏஜென்சியிடம் ரூ. 70,000 கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

குவைத் சென்ற குமாருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. முதல் 6 மாதங்களுக்கு டிரைவிங் லைசென்ஸ் கிடைக்க தாமதமான காரணத்தால் ஷேக் வீட்டிலேயே வீட்டு வேலை செய்யும் தொழிலாளராக இருந்து வந்தார். இவருக்கு சம்பளமாக 60 குவைத் தினார்கள் மட்டுமே கொடுக்கப் பட்டது. 6 மாதம் கழித்து லைசென்ஸ் கிடைத்தது.

டிரைவராக வேலைசெய்ய ஆரம்பித்த குமாருக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. ஷேக் தன்னுடைய மனநலம் குன்றிய 16 வயது மகனை பார்த்துக் கொள்ளும் படி கட்டளையிட்டு உள்ளார். தினமும் 15 மணி நேரம் கட்டாயம் வேலைசெய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார். குமாருடைய பராமரிப்பில் இருந்த மனநலம் குன்றிய இளைஞன் அடிக்கடி வீட்டை விட்டு வெளியே ஓடிவிடுவதால் அவரை தேடி அலைவதே குமாரின் முக்கிய பணியாகும். மேலும் குமாருக்கு போதிய அளவு உணவு கொடுக்கப்படவில்லை.

இதைவிட பெரிய கொடுமையாக இரவு நேரங்களில் தூங்கும் போது குமாரை அறைக்குள் விட்டு கதவை பூட்டிவிடுவார் ஷேக். இவ்வாறு பல கொடுமைகளை அனுபவித்த குமார் ஷேக்கிடமிருந்து தப்பி வெளியே வரமுடியாததற்கு காரணம் குமாரின் பாஸ்போர்ட் ஷேக்கிடம் சிக்கிக் கொண்டதே ஆகும்.

இவ்வாறு பல துன்பங்களுக்கிடையில் 1995-ம் வருடம் முதல் 1999-ம் வருடம் வரை பணியாற்றிய குமார் தற்போது விடுபட்டு தமிழ்நாட்டிலேயே விவசாயத் தொழிலை செய்து வருகிறார்.



A case of Mr. Kumar who was working as a domestic worker in Kuwait.



படிப்பகம்

www.padippakam.com

## இலங்கை:

# வெளிநாடுகளில் வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்களின் மண்டல உச்சி மாநாடு

இலங்கையின் தலைநகரம் கொழும்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை வெளிநாடுகளில் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக மண்டல உச்சி மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 24 நாடுகளைச் சேர்ந்த வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களை சேர்ந்த 132 நபர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் வெளிநாடுகளில் வீட்டு வேலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் அடையாளம், பாதுகாப்பு, மற்றும் உண்மையான மதிப்பு ஆகியவற்றை கீழ்கண்ட முறைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் முன்னேற்ற கண்டுபிடிப்புகளை சட்டப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

- வெளிநாட்டில் வீட்டுவேலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள், தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலத்தை தொழிலாளர்களை அனுப்பும் நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.
- வெளிநாடுகளில் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் மற்ற இடம்பெயர்ந்த தொழிலாளர்களைப்போல அங்கீகரிக்கப்படவேண்டும்.
- குடிபெயர்தல் என்பது அனைத்து நாட்டின் வளர்ச்சிக் கொள்கைகள் மற்றும் திட்டமிடுதல் மற்றும் உலகளாவிய சமூக மற்றும் பொருளாதார நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
- குடிபெயரும் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடிபெயரும் போது தொழிலாளர்கள் கடத்தப்படுவதை பற்றிய விழிப்புணர்வை கொடுக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- முறையான ஆவணங்களுடன், முறையான ஆவணங்கள் இல்லாமல் குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் சர்வதேச தொழிலாளர் நிலை, மனித உரிமைகளுக்கு உட்பட்டு நடத்தப்படவேண்டும்.
- குடிபெயரும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் உரிமைகளுக்கான 1990-ம்




படிப்பகம்

www.padippakam.com

வருடத்திய ஐக்கிய நாட்டு சபையின் சர்வதேச சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

- ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள நாடுகள் குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தவேண்டும்.
- தேசிய மனித உரிமை ஆணையங்கள் தங்களுடைய குறிப்பேடுகளில் குடிபெயரும் வீட்டு வேலைத் தொழிலாளர்களின் நலனையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- *ILO, IOM, UN AGENCIES, OHCHR, UNIFEM,UNICEF, UNAIDS and WHO* முதலிய சர்வதேச அமைப்புகள் ஒன்றிணைந்து குடிபெயரும் வீட்டுவேலை தொழிலாளர்களின் கருத்துக்களை வெளிக் கொணர முன்வரவேண்டும்.
- பெண்கள் குடிபெயரும் முறைக்கு எதிரான ஆட்சி முறை மற்றும் தடைகள் நீக்கப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இருக்கவேண்டும்.
- பாதுகாப்பு சார்புடைய கருத்துக்கள் அந்நியர் என நினைத்து தொழிலாளர்களுக்கு எதிரான தாக இருக்ககூடாது.
- தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுக்கும், தொழிலாளர்கள் செல்லும் நாடுகளுக்கும் இடையே உள்ள ஒப்பந்தம் முறையானது குடிபெயரும் வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உரிமைகள் ஆகியவற்றை






படிப்பகம்

www.padippakam.com

உறுதிசெய்யும் வகையிலும் தொழிலாளர்களை பணியில் அமர்த்தும் வேலை வாய்ப்பு நிறுவனங்களை நியமிப்பது வெளிப்படையாக இருக்கும் வகையிலும் இருக்க வேண்டும்.

- அரசாங்கம் மற்றும் உள்நாட்டு அமைப்புகளின் வழக்கு மன்றங்கள் குடிபெயரும் தொழிலாளர்களின் சவால்களை வெளிக்கொணர முன்வர வேண்டும்.
- குடிபெயர்தலுக்கு உரிய கொள்கைகளும் சட்டங்களும் அனைத்து நாடுகளிலும் கட்டாயமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- குடிபெயரும் தொழிலாளர்களால் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணி, தொழிலாளர்களின் மருத்துவப்படி பொருளாதாரம், மற்றும் சமூக நிலைகள் பற்றிய தெளிவான குறிப்பீடுகள் அவ்வப்போது வெளியிடப்படும்.
- குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் அங்கேயே திருமணம் செய்து குழந்தை பெற்று குடும்பம் நடத்தவும் அவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் அவர்கள் சந்தோஷமாக இருக்க உரிமைகள் அளிக்கப்பட வேண்டும்.
- குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களின் பணியையும் பணி செய்யும் இடத்தையும் மாற்றிக் கொள்ள உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
- குடிபெயரும் வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.
- குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தை எளிதாக பாதுகாப்பாக அனுப்பும் வகையில் வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
- தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் தொழிலாளர்களுக்கு பொதுத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை கொடுக்க முன்வரவேண்டும்.
- குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக இயங்கும் மண்டல, தேசிய அளவிலான அமைப்புகளுக்கு சுதந்திரமாக மேற்பார்வையிடவும் திட்டங்களை செயல்படுத்தவும் வழிவகை செய்யவேண்டும்.
- உள்நாட்டு அரசாங்க அமைப்புகள், தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உள்ள திட்டங்களை வலுப்படுத்த உதவ முன்வரவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com




- குற்றம், இறப்பு, பாலியல், ரீதியாக துன்பப்படுத்துதல் கடுமையான காயங்கள், மனித உரிமைகளுக்கு எதிரான செயல்களுக்கு விசாரனை வெளிப்படையாக நடைபெற வேண்டும்.
- குடிபெயரும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் அதிகாரங்களை வளர்த்துக் கொள்ளவும் உள்நாட்டு சமூக அமைப்புகள் உதவ வேண்டும்.
- பத்திரிகை, உள்நாட்டு அமைப்புகள் கட்டாயம் ஒன்றிணைந்து பொதுவாக விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தவேண்டும். அவை வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்களை மதிக்கும் வகையிலும் அங்கீகரிக்கும் வகையிலும் செய்யப்பட வேண்டும்.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குடியெர்ந்து வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எதிரான மனிதஉரிமை மீறல்களை ஒழிக்க பாடுபடவேண்டும்.

Strategies, Policies, Plans and development interventions should be established to address the issue of recognition, Protection and dignity of Foreign migrant domestic workers. CARAM-ASIA was bring representatives from Middle East.



படிப்பகம்

www.padippakam.com

## இலங்கை:

# வெளிநாட்டில் வேலை செய்யும் பெண்களின் துயரநிலை

ஆயிரக்கணக்கான இலங்கை இளம் பெண்கள் தங்கள் குடும்பங்களை காப்பாற்றுவதற்காக மத்திய கிழக்கு நாடுகளில் கடுமையாக வேலை செய்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லாதிருக்கிறது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பிரச்சினை சிக்கலானது, இவர்களது அப்பாவி குழந்தைகளின் வாழ்க்கையே அர்த்தமற்றதாகிவிடுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் 10 லட்சம் இலங்கையர்களில் பெரும்பான்மையினரான பெண்கள் குடும்பப் பிரிவினைகள், சிறுவர் புறக்கணிப்பு, போதை பிரச்சனை, விசுவாசமற்ற கணவன்மார், முறைகேடான பாலுறவு போன்ற பல்வேறு தொல்லைகளை எதிர் நோக்கியுள்ளனர்.

முறைகேடான பாலுறவு தொடர்புகள், விபச்சாரம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சமூக பிரச்னைகளுக்கு அரசியல் மூலமாகவும் அரசாங்கக் கொள்கைகள் மூலமாகவும் சில தீர்வுகளை கொண்டு வரலாம்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்பில் அதிகரிக்கும் பெண்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் புதிய சம்பாதிக்கும் முறை ஆகியவை அவர்களை செல்வாக்கு உள்ள ஒரு சமூக பிரிவாக காட்டுகிறது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரியும் பெண்கள் வெளிநாட்டு முதலாளிகளால் துன்புறுத்தப்படுவதாலும் பாலுறவுக்கு உட்படுத்தப்படுவதாலும் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பல துன்பங்களுக்கிடையில் சென்ற வருடம் மட்டும் 10 லட்சம் டாலரை அந்நியச் செலாவணியாக பெற்றுத் தந்துள்ளனர். இலங்கைப் பெண்களின் இந்த வருமானத்தை மட்டுமே நினைத்துக் கொண்டு இருக்காமல் இவ்வளவு வருமானத்தை ஈட்டித் தரும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்க இலங்கை அரசு முன்வரவேண்டும் .

Social problems faced by women migrant workers from Sri Lanka.



படிப்பகம்

www.padippakam.com

## மலேசியா:

# சிறைக்கொடுமைக்குப் பலியான இந்தியர்

மலேசியாவில் பரவலாக நடைபெற்ற கொள்ளைகளுக்கு எதிராக முடுக்கி விடப்பட்ட காவல்துறையின் நடவடிக்கையில் இந்தியாவை சேர்ந்த, போதிய கல்வி இல்லாத பல ஏழைகள் சிக்கினர். இவ்வாறு சிக்கிய இந்தியர்களில் தர்மராஜன் என்ற 20 வயது இளைஞனும் ஒருவர். இவர் கோலாலம்பூரில் சுமை தூக்கும் தொழிலாளியாக இருந்து வந்தார்.

இவர் கடந்த சூன் 9-ஆம் தேதி புத்ரஜெயாவில் உள்ள சிறையிலிருந்து புத்ரஜெயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். புத்ரஜெயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தர்மராஜன் சூன் மாதம் 21ஆம் தேதி இறந்துவிட்டார். மருத்துவமனையில் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின்படி இறப்பிற்கான காரணம் நிமோனியா எனக் கூறப்படுகிறது.

ஆனால் மலேசிய பல்கலைக் கழகத்தின் மருத்துவ பிரிவின் பிரேத பரிசோதனை அறிக்கையின் படி தர்மராஜன் டி.பி என்று சொல்லக்கூடிய காசநோயின் காரணமாக இறந்துவிட்டார் என்று கூறப்படுகிறது. மேலும் போலீஸ் பிடியில் இருந்த தர்மராஜன் சரியாக உணவு உட்கொள்ளவில்லை எனவும் மருத்துவ அறிக்கை கூறுகிறது.

Migrant Rights Cell

**Peace Trust**

Near Police Colony, Trichy Road, Dindigul - 624 005
Tamilnadu, India. Ph: +91451 - 410021, Fax: +91451-410372,
email: peacetrust@vsnl.com, Internet: www.peacetrust.org.in

NGO Having Consultative Status with ECOSOC - United Nations Economic and Social Council

To

Datuk Seri Abdullah Ahmed Badawi
Minister of Home Affairs
Pusat Pentadbiran Kerajaan Persekutuan
62502 Putrajaya, Malaysia.

Date: [illegible]

Dear Sir,

Greetings from Peace Trust

Sub : The death in custody of Mr.Tharma Rajan

Peace Trust write to express our concerns about the death in Malaysian police custody of Mr.Tharma Rajan on 21st June and the difficulties there have been with investigations into his death.

The death of this previously healthy young man was in mysterious circumstances. The two post mortems did not reach the same conclusion. There was also an indication that the police had mistreated Mr. Tharma Rajan. In any case, the police did not get him medical treatment soon enough to save his life.

International Human Rights standards require the humane treatment of persons in custody, including the provision of appropriate medical treatment. In the circumstances, there needs to be accountability and a transparent investigation. We understand the Human Rights Commission is now investigating, though it had difficulties getting access to the post-mortem report. We hope the police will also investigate fully and that the investigations will be open and confront all the issues.

We urge you to do all you can to support accountability for whatever has happened and to ensure openness in the investigations into the deaths of Mr. Tharma Rajan and others who have died in police custody.

Expecting your Co-operation in this regard.

Thanking you,

Yours Sincerely,
[signature]
(J Paul Baskar)
Chairman, Peace Trust.

இச்சூழ்நிலையில் தர்மராஜனின் சகோதரர் அசோகன் இறந்த உடலை அடையாளம் காட்டிய பிறகு 'மலேசியக்கினி' என்ற பத்திரிகை செய்தி நிறுவனத்தின் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் போது தர்மராஜனின் உதடுகள் கிழிந்து இருப்பதாகவும், இரத்த கறைகள் வாய்ப்பக்கங்களில் இருந்ததாகவும், தர்மராஜனின் மலத்துளைக்கு சற்று மேலே 2 இஞ்ச் அளவுக்கு தசை கிழிக்கப்பட்டு தொங்கிக்கொண்டு இருப்பதாகவும் கூறினார்.

இதற்கு முன்னர் தான் தர்மராஜனைச் சிறையில் சந்தித்த போது காவல்துறையினர் தன்னை கால்களிலும் பாதங்களிலும்



படிப்பகம்

www.padippakam.com

அடிப்பதாக கூறியுள்ளதாக தர்மராஜன் கூறியதாக அசோகன் நிருபர்களிடம் கூறினார். இதே போன்று பல கைதிகள் சிறையிலேயே இறக்கின்றார்கள் என பலத் தகவல்கள் வந்தவண்ணம் உள்ளன.

மலேசிய மனித உரிமை ஆணையம் தர்மராஜனின் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் வகையில் விசாரணையை துவக்கியுள்ளது. இந்த விசாரணை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட வேண்டும் என ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

தர்மராஜனின் இறப்பிற்கான காரணம் பற்றி அறிய நடைபெறும் விசாரணை பொறுப்புணர்வுடனும், வெளிப்படையாகவும் நடைபெற வேண்டும் என அமைதி அறக்கட்டளை மலேசியாவின் தலைமை காவல் ஆய்வாளர், மலேசிய உள்துறை அமைச்சர் மற்றும் மலேசிய மனித உரிமை ஆணையத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

Peace Trust appealed to Malaysia's Inspector General of Police Minister of Home Affairs and Human Rights commission to call for accountability and transperant investigations into the death in police custody of Tharmarajan.

# மலேசியாவிற்கு அதிகத் தொழிலாளர்கள் தேவையா?

மலேசியாவில் செங்கல் தயாரிப்புத் தொழிலில் குறிப்பிடத்தக்கவரான டோனிநாதன் தினமும் 1,30,000 செங்கல் கற்களை தயாரித்து விற்று வந்தார். தற்போது செங்கல் கற்கள் தயாரிப்பு இதில் பாதியைவிடக் குறைவாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் தொழிலாளர்கள் பற்றாக்குறையே எனக்கூறுகிறார் அவர்.

மலேசியாவில் அமல்படுத்தப்பட்டுள்ள புதிய குடிபெயர் சட்டத்தின்படி 4,00,000-க்கும் அதிகமாக இந்தோனேசியாவை சேர்ந்த குடிபெயர்ந்த தொழிலாளர்கள் தாமாகவே தங்கள் நாடுகளுக்கு திரும்பிச் சென்றுள்ளனர். அரசாங்க அறிக்கைப்படி முறையற்ற ஆவணங்கள் இல்லாத 80% இந்தோனேசியத் தொழிலாளர்களே மலேசியாவில் 70% வேலைகளை செய்து வந்துள்ளனர்.

இதன் காரணமாக மலேசியாவின் கட்டுமானத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது மலேசியாவில் கடந்த ஆகஸ்ட் 14-ம் தேதி முதல் தடைகள் தளர்த்தப்பட்டு இந்தோனேசியத் தொழிலாளர்களை கட்டுமான பணிக்கும் உற்பத்தி பணிக்கும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் பொருளாதார ஆய்வு மையத்தின் கணக்கீட்டின்படி மலேசியாவில் முறையான ஆவணங்களோடு 20 இலட்சம் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

Malaysia wanted : More Workers



படிப்பகம்

www.padippakam.com

# போதைப்பொருள் விற்ற தொழிலாளி

20 வயதே நிரம்பிய கிருஷ்ணன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கமுதி அருகே ஒரு கிராமத்தை சேர்ந்தவர். இவர் கடந்த 2001 வருடம் கட்டிட பணிகளுக்காக ஒரு டிராவல் ஏஜென்சி மூலம் ரூ. 45,000 கொடுத்து மலேசியா சென்றுள்ளார்.

எவ்வித திறமையும் இல்லாத கிருஷ்ணன் மலேசியாவில் போதைப் பொருட்களை கடத்தி விற்கும் பணியில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டார். இதற்காக மாதச்சம்பளமாக இவருக்கு இந்திய ரூபாய் 5000 மட்டும் கொடுக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தும் கும்பலிடம் மாட்டிக்கொண்ட கிருஷ்ணன் 'கஞ்சா' என்னும் போதைப் பொருளை சிறு சிறு பொட்டலங்களில் விற்று வந்தார். இவ்வாறு 2 மாதங்கள் 'கஞ்சா' விற்று வந்த கிருஷ்ணன் போலீசிடம் மாட்டிக்கொண்டார். போலீஸ் கிருஷ்ணனை கைது செய்து துன்புறுத்தியதோடு இல்லாமல் இவருடைய குடும்பத்தினரை கடிதம் மூலமோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ள அனுமதிக்கவில்லை.



பின்னர் கிருஷ்ணன் போலீசிடமிருந்து இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்டார். அங்கும் கிருஷ்ணன் உடல் ரீதியாக பயங்கரமாக துன்புறுத்தப்பட்டார். இவ்வாறு பல இன்னல்களுக்கிடையில் தன் குடும்பத்தினரை கடிதம் மூலம் தொடர்பு கொண்ட கிருஷ்ணன் தன் கஷ்டங்களை கூறி தெரிந்தவர்கள் மூலம் ரூ.40,000 ஏற்பாடு செய்து அபராதமாக கட்டி தற்போது தமிழகம் திரும்பியுள்ளார்.

A case of Mr. Krishnan was working as a drug smuggler in Malaysia.



படிப்பகம்

www.padippakam.com

# சொல்லப்பட்ட ஊதியம் இல்லை! இந்தியத் தூதரகத்தில் புகார்



மலாக்காவில் உள்ள மின்னணுத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் இந்த தொழிலாளர்கள் அனைவரும் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் இந்திய தூதரகத்தில் கூடினர். கடந்த ஜனவரி, ஜூன், ஜூலை, செப்டம்பர் ஆகிய மாதங்களில் 4 கட்டமாக அழைத்து வரப்பட்ட 180 இந்திய தொழிலாளர்கள் மலாக்காவிலுள்ள மின்னணுத் தொழிற்சாலையில் வேலைக்கு சேர்க்கப்பட்டனர்.

கேரளம் மற்றும் சென்னையைச் சேர்ந்த தங்களுக்கு 600 வெள்ளி சம்பளம் வழங்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டதால் இங்கு வந்ததாக அவர்கள் கூறினர். வேலையில் சேர்ந்த பின்னர் 300 வெள்ளி சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டதோடு லெவி கட்டணத்தை கழித்துக் கொண்டு 180 வெள்ளி மட்டுமே தங்களுக்கு வழங்கப்பட்டதால் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக இந்த தொழிலாளர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

மலேசியாவில் வேலை கிடைப்பதற்காக ஒவ்வொருவரும் 80 ஆயிரம் முதல் 130 ஆயிரம் வரை செலவு செய்ததையும் அவர்கள் தெரிவித்தனர். "600 வெள்ளி சம்பளம் வழங்கப்படும் என எங்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. இந்த வாக்குறுதியை நம்பித்தான் நாங்கள் இங்கு வந்தோம். வேலையில் சேர்ந்த பின் 300 வெள்ளி மட்டுமே சம்பளமாக வழங்கப்படும் என எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது பெரிய ஏமாற்றமாக இருந்தது. இப்போது லெவி கட்டணத்தை கழித்துக் கொண்டு வெறும் 180 வெள்ளி மட்டுமே சம்பளம் வழங்கப்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது" என்று பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் கூறினர்.

இந்த 180 தொழிலாளிகள் பிரதிநிதியாக ஐவர் இந்திய தூதரை சந்தித்து தங்களது பிரச்னையை முறையிட்டனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் அதிகாரிகளை சந்தித்து விளக்கம் கேட்கப்படும் என இந்திய தூதரக அதிகாரிகள் உறுதிகூறினர்.

180 Indian Migrant workers complained to Indian Embassy in Malaysia



படிப்பகம்

www.padippakam.com

# பிலிப்பைன்ஸ்:
# எச்.ஐ.வி. பாதிப்பில் இளம்பெண்கள்

எச்.ஐ.வி. யினாலும், எயிட்சாலும் அதிக அளவிற்கு பாதிக்கப் பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டில் யூ.என்.டி.பி.யினால் சேகரிக்கப் பட்ட தகவல்கள்படி 19 வயது முதல் 29 வயது வரை உள்ள இளம் பெண்களே அதிகளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர் என அதிர்ச்சியூட்டும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக ஆண்களில் 30-39-வயதுக்குட்பட்டோரே எச்.ஐ.வி யினால் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளனர். பிலிப்பைன்சில் எயிட்ஸ் நோய் உள்ளவர்களில்60% ஆண்களே. 19-29 வயதுக்குட்பட்ட பெண்களும் இந்த விகிதத்தை பின்பற்றுகின்றனர்.

உளவியல், சமூக, கலாச்சார காரணங்களும் இளம் பெண்கள் எச்.ஐ.வி.க்கு ஆளாவதற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. பெண்கள் பாலியல் உறவு ரீதியாக வலுவற்றவர்களாக உள்ளனர். பெரும்பான்மையினர் தங்களுடன் உறவு கொள்பவர்களை பாதுகாப்பு உறை அணிய சம்மதிக்க வைக்கும் சக்தியற்றவர்களாகவே உள்ளனர்.

பெண்கள் தங்களை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பது பற்றி சிறிதும் அறியாத நிலையிலேயே உள்ளனர். அதேவேளை இளம் பெண்களே சுத்தமானவர்கள், பாதுகாப்பானவர்கள் எனக் கருதும் ஆண்கள் இளம் பெண்களையே நாடுகின்றனர்.

அமெரிக்காவை தளமாக கொண்ட கிழக்கு-மேற்கு மக்கள் தொகை, சுகாதார ஆய்வு மையத்தினரின், இளவயதினர் கருத்தறிதல், பாலியல் பற்றிய 1999-ம் வருட கணிப்புப்படி 'திருமணத்திற்கு முன் 25 வயது வரை உள்ள ஆண்களில் 37% பேர் தமது மனைவியரைத் தவிர இன்னொரு பெண்ணுடனாவது பாலியல் உறவில் ஈடுபட்டு உள்ளனர்' என தெரிய வந்துள்ளது.

குறைந்தது 30% பிலிப்பைன் பெண்கள் திருமணத்திற்கு முன்னர் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களில் அதிகமானோர் தமது எதிர்கால கணவன்மாருடன் இச்செயலில் ஈடுபட்டதாகவும் கணிப்புகள் தெரிவிக்கின்றது. தமது கணவன்மார்களது திருமணத்திற்கு முந்தைய பாலியல், மற்றும் ஏனைய, செயற்பாடுகளினால் அதிகளவில் பிலிப்பைன் பெண்கள் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இப்பெண்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்த ஆண் தொழிலாளர்களின் மனைவியர் ஆவர்.

**Younger Women at risk from HIV / AIDS in Philippines**



படிப்பகம்

www.padippakam.com

## சவுதி அரேபியா:

# தொழிலாளர் உரிமைக்கு ஆதரவாக மதகுரு பேச்சு

சவுதி அரேபியா வில் உள்ள 22 மில்லியன் மக்கள் தொகையில் 7 மில்லியன் அயல்நாட்டுத் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகமானத் தொழிலாளர்கள் மத்திய கிழக்கு, தெற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியா நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து உள்ளனர். மற்ற வளைகுடா நாடுகளைப் போலவே சவுதி அரேபியாவிலும் ஒப்பந்தம் முறையில் வரக்கூடிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகளுக்கு தொழிலாளர்கள் மீது அதிகாரம் செய்யும் வகையில் சட்டங்கள் உள்ளன.




அம்னஸ்டி இண்டர்நேஷனல் என்ற சர்வதேச அமைப்பின் கூற்றுப்படி சவுதி அரேபியாவில் குறிப்பாக வீட்டு வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் அதிகளவில் துன்புறுத்தப் படுகின்றனர் என்பதாகும். இந்நிலையில் அதிகப்படியான வெளிநாட்டுத் தொழிலாளர்கள், ஒப்பந்தத்தை மீறும் வகையில் வேலைக்கான அனுமதி, உடல்நல காப்பீடு மற்றும் தங்கும் வசதிகளுக்கு அதிகளவு பணம் வசூல் செய்யப்படு கிறது என புகார் கூறுகின்றனர்.

இந்நிலையில் சவுதி அரசாங்கம் தங்கள் நாட்டில் தற்போது நிலவும் வேலையின்மையை ஒழிக்க 35 வர்த்தக பிரிவுகளில் அயல்நாட்டுத் தொழிலாளர்கள் வேலை செய்வதை தடுக்க உத்தேசித்து உள்ளது.

இவ்வாறு இருக்கும்போது “மஃப்தி” என்ற இஸ்லாமிய மத அமைப்பு தொழிலாளர்களுக்கு உரிய நேரங்களில் சம்பளம் கொடுக்காமல் இருப்பதை கண்டித்து அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. மேலும் இது போன்ற செயல்கள் இஸ்லாம் மதக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்று கூறியுள்ளது.

தொழிலாளர்களை பயமுறுத்துவதை இஸ்லாம் வன்மையாக கண்டிப்பதாகவும் மேலும் ஒப்பந்தப்படி தொழிலாளர்கள் நடத்தப்பட வேண்டும் என இஸ்லாம் மத குருமார்களில் ஒருவரான ‘ஷேக்’ அப்துல் அஜீஸ் கூறியுள்ளார்.

Saudi cleric preaches workers rights



படிப்பகம்

www.padippakam.com

## தென்னாப்பிரிக்கா:

# நினைவில் நின்ற காட்சி

**செப்டம்பர் தொடக்கத்தில் ஜோகன்ஸ்பர்க்; டர்பன் நகரங்களுக்குச் சென்ற அமைதி அறக்கட்டளை தலைவர் ஜே.பால்பாஸ்கர், தென்னாப்பிரிக்கப் பத்திரிகையாளர்கள், சமூக செயல்பாட்டாளர்களை (தமிழர்கள்) சந்தித்தார்.**

இந்தச் சம்பவம் நடந்தது 1860-ம் ஆண்டு, நவம்பர் 17-ம் நாள். இந்திய தொழிலாளர்கள் தென்னாப்பிரிக்காவின் நேட்டால் துறைமுகத்தில் வந்திறங்கியபோது நடந்தது. அதைப்பற்றி தென்னாப்பிரிக்காவின் மெர்குரி வார இதழில் எழுதப்பட்டிருந்த செய்தி இது.

ஒரு பெரிய கப்பல் (ட்ருரோ) இந்திய ஒப்பந்த தொழிலாளர்களை (முதல் குழுமம்) ஏற்றிக் கொண்டு தென்னாப்பிரிக்கா துறைமுகத்தை வந்தடைந்தது. அப்பொழுது சிலர், இந்த கூலி தொழிலாளர்கள் காலரா, மற்றும் சில தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும், அந்த கப்பலின் சுகாதார வசதிகள் மீதும் சந்தேகம் தெரிவித்தனர். ஆனால் இந்த ஆதாரமற்ற வதந்திக்கு மாறாக இந்த கூலி தொழிலாளர்களை சோதித்த டாக்டர் ஹாலந்து எந்த வித நோய்களும் தாக்கவில்லை என சான்றளித்து விட்டார். அத்துடன் இந்த சர்ச்சை முடிவுக்கு வந்தது.

இந்தி கூலி தொழிலாளர்கள் துறைமுகத்தில் (டர்பன்) வந்திறங்கியபோது சோம்பலான உருவங்களையே கப்பலில் இருந்து எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் ஏமாந்து போனார்கள்.

அவர்கள் நினைத்ததற்கு மாறாக, கப்பலில் இருந்து கருப்பு தோல் கொண்டவர்களின் கூட்டம் தங்களுக்குள் சிரித்துக் கொண்டும், பேசிக்கொண்டும், வெளியே வந்த வண்ணம் இருந்தனர். அவர்களின் முகத்தில் திருப்தியான தோற்றத்தை காண முடிந்தது. தென்னாப்பிரிக்கர் இந்த தொழிலாளர்களை பற்றி என்ன என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் புரியாதவர்களாய் இந்த தொழிலாளர்கள் இருந்தனர்.

ஆண்கள் பெரிய தலைப்பாகையுடனும், மெலிந்த கால்களுடனும். வண்ண ஆடைகள் அணிந்தும் இருந்தனர். பெண்கள் வறண்ட, பிசுபிசுத்த நீண்ட தலைமுடிகளுடனும், (கால்வரை தொடுவதாக இருந்தது) மெலிந்த குழந்தைகளுடனும் வந்து இருந்தனர். இவற்றைப் பார்க்கும்போது ஒரு தனிப்பட்ட, இதுவரையில் அங்குள்ளவர்கள் கண்டிராத இனமாக இந்திய தொழிலாளர்கள் இருந்தனர்.

இந்த கூலி குழுமத்தின் தலைவர், தான் மட்டும் வீட்டில் பத்திரமாக இருக்க எண்ணுபவராய்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தார். அவர் தன்னைப் பற்றியே பல கோணங்களில் கற்பனை செய்துகொண்டார் நேட்டால், சென்னையை விட குளிராக இருக்கிறது என்று கூறினார்.

இந்த நாள் வரையில் அந்த இடத்தில் இது போன்ற ஒரு கூட்டத்தை யாரும் கண்டிருக்கவில்லை. கப்பல் ஒரு முடிவே இல்லாத (எண்ணற்ற) உயிருள்ள சரக்குகளை (தொழிலாளர்கள்) இறக்கிக்கொண்டிருந்தது. இந்த கூட்டத்தில் பெரும்பாலும் விவசாய தொழிலாளர்கள், வீட்டு வேலைக்காரரர்கள், மெக்கானிக், வர்த்தகர்கள் ஆகியோர் இருந்தனர். இதில் சிறுபகுதி முடிதிருத்துபவர்கள், தச்சர்கள், கணக்கர்கள், குதிரைகளை பராமரிப்பவர்கள் ஆகியோர் இருந்தனர்.

பெண்களை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் ஆயாக்கள், வீட்டு பணி'; பெண்கள், செவிலியர்கள் ஆகியோர் இருந்தனர். இந்த ஒரு கூட்டம் பண்ணை தோட்டத்திற்கு வேலைக்கு வந்தவர்கள் என்பதைவிட ஒரு பலதரப்பட்ட வேலை தெரிந்தவர்களை கொண்டதாக இருந்தது. இதில் மிகச் சிலர் அனைவருக்கும் தேவைப்படுபவர்கள் அதாவது பலதரப்பட்ட வேலை தெரிந்தவர்களாக இருந்தனர்.

'A remarkable scene' when the Indians arrived South Africa.



வெளிநாடு செல்வோருக்கான

# குடியேற்ற கட்டணம் உயர்வு

புதுடெல்லி, அக்.22– வெளிநாடு செல்வோருக்கான குடியேற்ற கட்டணம் வருகிற 1–ந் தேதி முதல் மாற்றி அமைக்கப்படுகிறது.

இதன்படி வெளிநாட்டுக்கு வேலைதேடி செல்வோருக்கான குடியேற்ற கட்டணம் 100 ரூபாயில் இருந்து 200 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. சுற்றுலா, வியாபாரம், கல்வி போன்றவற்றுக்காக வெளிநாடு செல்வோருக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க மேலும் ரூ.100 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

வேலைக்கு ஆட்களை தேர்வு செய்து அனுப்பும் ஏஜெண்டுகளுக்கும் பதிவு கட்டணம் உயர்த்தப்படுகிறது. இவர்களுக்கான பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் ரூ.500–ல் இருந்து ரூ.2 ஆயிரமாக உயருகிறது.

இந்த கட்டண உயர்வு மூலம் ரூ.6 கோடி அரசுக்கு கூடுதலாக கிடைக்கும் என்று தொழிலாளர் இலாகா தெரிவித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## நெஞ்சை உருக்கும் சோகம்:

# இந்தியர்களின் அடிமை கோலம்

வான் ரீபெக் 1652-ம் ஆண்டு இந்தியா மற்றும் அதன் கிழக்கத்திய நாடுகளுக்கு சென்று வரும் கப்பல்களுக்கு தேவையான உதவிகளை செய்ய கேப்டவுன் டச்சு காலனியை அமைந்தார். அமைக்கப்பட்ட கொஞ்ச நாட்களிலேயே இந்தியாவிலிருந்து மக்கள் கொண்டு வரப்பட்டு இங்குள்ள குடியேறிகளுக்கு வீட்டு வேலைகள் செய்ய அடிமைகளாய் விற்கப்பட்டனர். இவர்கள் தோட்டங்களில் உள்ள கடுமையான வேலைகளை செய்து முடிக்கவும் அடிமைகளாய் பயன்படுத்தப்பட்டனர்.

வங்காளத்தை சேர்ந்த மேரி என்ற பெண் வான் ரீபெக்கிற்காக 1653-ல் வாங்கப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு 1655-ல் வான் ரீபெக் டச்சு கப்பல் அதிகாரியிடமிருந்து, இந்த கப்பல் ஆசியாவிலிருந்து ஹாலந்து நாட்டிற்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது, பெங்காலை சேர்ந்த ஒரு குடும்பத்தையே வாங்கினார். இக்குடும்பத்தில் டோமிங்கோ, ஏஞ்சலா மற்றும் மூன்று குழந்தைகள் அடங்குவர்.

மே 21-ம் நாள் 1656-ம் ஆண்டு வெள்ளை இனத்தை சேர்ந்த ஜான் ஆட்டர்ஸ் என்பவருக்கு பெங்காலைச் சேர்ந்த கேத்தரின் என்ற பெண்ணுக்கும் (அடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டவர்) திருமணம் நடந்தது. இதற்குப் பிறகு அதே ஆண்டில் ஆண்டன் முல்லர் பெங்காலை சேர்ந்த டொமிங்கோ என்ற பெண்ணை மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

கிட்டத்தட்ட 18ஆம் நூற்றாண்டு வரை, ஆசியாவிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், நூற்றுக்கணக் கானவர்கள் பெங்கால் மற்றும் கேரளாவிலிருந்து கொண்டு வரப்பட்டு கேப்டவுனில் அடிமைகளாய் விற்கப்பட்டனர். டச்சு கப்பல் அதிகாரிகளும், டச்சு இந்தியா கம்பெனியைச் சேர்ந்தவர்களும் ஹாலந்திற்கு திரும்பும்போது அடிமைகள் அல்லது வேலையாட்களை தன்னுடன் அழைத்துச்சென்று கேப்டவுனில் அதிக விலைக்கு விற்றனர்.

ஆனால், ஹாலந்து நாட்டிற்கு அடிமைகள் கொண்டு செல்லப்படவில்லை. ஏனென்றால் அங்கு அடிமைத்தனம் தடை செய்யப்பட்டிருந்தது. இங்கிலாந்து, மற்றும் டேனிஷ்



படிப்பகம்

www.padippakam.com

நாட்டு கப்பல்கள் கூட நூற்றுக்கணக்கான அடிமைகளை சுமந்து சென்றன. மொத்தத்தில் இந்தியாவிலிருந்து டச்சு கம்பெனியார்கள் மூலம் எண்ணற்ற இந்தியர்கள் அடிமைகளாய் பட்டாவியாவிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சில நாடுகளை சேர்ந்த ஆராய்ச்சி யாளர்கள் கேப்டவுனில் உள்ள பல ஆவணக்காப்பகங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு கேப்டவுனில் உள்ள அடிமைகளின் நிலை, மற்றும் அவர்களின் தாங்கும் திறன் பற்றியும், அடிமைகளின் விற்பனை பற்றியும் பல ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டனர்.

மேற்கூறப்பட்ட ஆய்வு அறிக்கைகளின்படி இந்தியாவைச் சேர்ந்த அடிமையான மேரி என்ற பெண் வில்லியம் கார்னெலிஸ் என்ற போலீஸ் கான்ஸ்டபிளுடன் படுக்கையறையில் இருந்தபோது 1600-ம் ஆண்டு பிடிபட்டார். அந்த போலீஸ்காரர் அபராதம் விதிக்கப்பட்டு பணியிலிருந்து விலக்கப்பட்டார். ஆனால் மேரி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.வான் ரீபெக் மற்றும் அவரது குடும்பத்தினர் 1662-ம் ஆண்டு மேரியை பட்டாவியாவிற்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

ஜான் ஆட்டர்ஸ், கேத்தரினுடன் திருமணம் செய்து கொண்டபிறகு பட்டாவியாவிற்கு மாற்றப்பட்டார். ஆண்டன் முல்லர் என்பவரை பற்றி எந்தவித தகவலும் இல்லை.

வான் ரீபெக்கின் குழந்தைகளை பேணி பாதுகாத்துவந்த ஏஞ்சலா என்ற பெண்ணை அவர் ஆப்ரகாம் கபீமா என்ற அவரது வழக்கறிஞரிடம் விற்றுவிட்டார். மேலும் கபீமா ஏஞ்சலாவிற்கும்



அடிமைத்தொழிலாளர்கள் தென் ஆப்பிரிக்க படகுத்துறையில் இறக்கப்படும் காட்சி. (இந்தியன் சவுத் ஆப்பிரிக்கன் பத்திரிகையின் காட்சி)



படிப்பகம்

www.padippakam.com

மேலும் அவரது மூன்று குழந்தைகளுக்கும் முழு சுதந்திரம் அளித்தார். ஆனால் கபீமா ஆறு மாதங்கள் முல்லர் என்பவரின் வீட்டில் வேலை செய்ய வேண்டியதாய் இருந்தது.

ஏஞ்சலா மிகவிரைவில் வெள்ளை சமூகத்தில் ஒருங்கிணைந்து விட்டார். மேலும் அவர் 1667-ம் ஆண்டு டேபிள் வேலி *(Table valey)* என்னும் இடத்தில் ஒரு வீட்டுமனை வாங்கினார். இதற்கு அடுத்த ஆண்டில் அவர் மலபாரிலுள்ள ஒரு அடிமையை வாடகைக்கு வாங்கினார்.



1669ஆம் ஆண்டு ஏஞ்சலா பாசன் என்பவரை மணந்தார் அவருக்கு மூன்று பிள்ளைகளும் பெற்றெடுத்தார். ஏஞ்சலாவின் முதல் கணவருக்கு பிறந்த மகள் ஒரு டச்சுக்காரரை திருமணம் செய்து கொண்டார்.

கணவர், இறந்தவுடன் (1689) ஏஞ்சலா தோட்டங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இத்தோட்டங்கள் 1720-ல் அவர் இறக்கும்போது சொல்லும் படியான விலைபோகும் அளவிற்கு இருந்தன. இந்தியாவின் பெங்காலில் இருந்து டச்சு இந்தியா கம்பெனியின் மூத்த அதிகாரிகளால் கொண்டு செல்லப்பட்டவர்கள் அதிர்ஷ்டக் காரர்களாக கருதப்பட்டனர் மற்ற அடிமைகள் ஒரு வருந்தத்தக்க சூழ்நிலையில் வாழ்க்கை நடத்தினர்.

கடந்த முப்பது வருடங்களாக அடிமைகளை பற்றி ஆராய்ச்சி மேற்கொண்ட கேய்ன்ஸ், டேவிட், எல்ஃபிக், கீஸ், ராஸ், ஷெல் மற்றும் பலர் நடைமுறையிலிருந்து பல உண்மைகளை மறைத்துவிட்டனர். எடுத்துக் காட்டாக அடிமைகள் கேப்டவுனில் பொருளாதார அடிப்படையில் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை.

18-ம் நூற்றாண்டுவாக்கில் அடிமைகள் வெள்ளை குடியேறிகளை விட எண்ணிக் கையில் அதிகமாக இருந்தனர். ஆசிய அடிமைகள் பெரும் பாலோர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் நிலங்களை திருத்துதல் போன்ற கடுமையான வேலைகளை செய்துவந்தனர். இவர்கள் ஆப்பிரிக்கர்களை போன்று தரம்தாழ்ந்த வகையில் நடத்தப்பட்டனர். இந்தோனேசிய அடிமைகளின் எண்ணிக்கைக்கு சமமாக இந்தியாவைச் சேர்ந்தவர்களும் இருந்தனர்.

Indian slaves in South Africa.



படிப்பகம்

www.padippakam.com

## தாய்லாந்து:

# பர்மிய தொழிலாளர்களின் சோகம்

பர்மா பல இனத்தவர்கள் வாழும் நாடு, குறிப்பாக பர்மியர்கள் அதிகளவில் வாழ்கின்றனர். பர்மா நாட்டின் மொத்த மக்கள் தொகை 42 மில்லியன் ஆகும். இதில் சிறுபான்மை இன மக்கள் மூன்றில் ஒரு பங்கு உள்ளனர்.

1948-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் அடைந்தது முதலே பெரும்பான்மை இன மக்களான பர்மியர்கள் நாட்டை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பர்மாவில் உள்ள சிறுபான்மை இன மக்கள் இன்னும் தங்களது சுதந்திரத்திற்காக கண்டனக் குரல்கள் எழுப்பி வருகின்றனர். கடந்த 50 ஆண்டுகளாக சிறுபான்மை இன மக்கள் இராணுவத்தினரால் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது மனிதர்கள் அதிகம் வாழும் இடங்களில் இராணுவ துருப்புகள் அதிகரிக்கப்படுவதை பர்மா வின் ஆட்சிமுறை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கின்றது. பர்மியர்கள் உட்பட பல சிறுபான்மை இனத்தவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப் படுகின்றனர். கற்பழிக்கப் படுகின்றனர், எனவே பர்மா வறுமையை நோக்கி அதிவேகமாக



தாய்லாந்து - பர்மிய எல்லை நகரான மையசாட் நகரில் [illegible] நதிக்கரையில் பர்மிய தொழிலாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

சென்று கொண்டிருக்கிறது.

பர்மாவில் 'கரன்' என்ற 2 வது பெரிய இனத்தவர் மொத்தம் 7 மில்லியன் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் பர்மாவின் கிழக்கு எல்லை பகுதியிலும் மத்திய டெல்டா பகுதியிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மிகவும் எளிமையாக வாழக்கூடியவர்கள். அமைதியான வாழ்க்கையை விரும்புபவர்கள். கிடைக்கும் நேரங்களில் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று சிரித்துப் பேசி மகிழ்வார்கள். குழந்தைகள், பெற்றோர்கள், வயதானவர்கள் என அனைவரும் சேர்ந்து வாழ ஆசைப்படுவார்கள்.

குழந்தைப் பருவத்திலி ருந்தே பிறருக்குத் தேவையான பொருட்களை அறிந்து கொடுத்து உதவும் வகையிலும் அனைவரிடமும் மதித்து, ஒழுக்கமாக நடந்து கொள்ளவும் பயிற்றுவிக்கப் படுகின்றனர். 1949 லிருந்தே இவர்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும், இராணுவத்தின் பிடியிலிருந்து விலகி அமைதியான, பாதுகாப்பான வாழ்க்கையை வேண்டியும் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

பர்மாவின் சட்டப்படி 'கரன்' இனத்தவர்கள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் அடக்கி வைக்கப் படுகின்றனர். 'கரன்' இனத்தவர்களின் கல்வி நிலையங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இவர்கள் இவர்களுடைய சொந்த மொழியில் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. 'கரன்' இனத்தை சேர்ந்த பல பெண்கள் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்படுகின்றனர். மனித உரிமைகள் அடிக்கடி மீறப்படுகின்றன.

இதன் காரணமாக பர்மாவை சேர்ந்த சிறுபான்மை இன மக்கள் நெடுந்தூரம் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு, எல்லைகளைத் தாண்டி, தாய்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். இவ்வாறு தாய்லாந்து -பர்மா எல்லைப் பகுதியில் 7 முகாம்களில் 1,100,000 'கரன்' இனத்தை சேர்ந்த அகதிகள் உள்ளனர்.

இவ்வாறு எல்லையோரப் பகுதிகள் வழியாக அடுத்த நாட்டிற்கு செல்ல முடியாத பலர் பர்மா நாட்டின் உட்பகுதியிலேயே குடி பெயர்கின்றனர். இவ்வாறு உள்நாட்டிற்குள்ளேயே குடி பெயரும், அகதிகள் எண்ணிக்கை 1974 முதல் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்வதற்கு காரணம் இராணுவ நடவடிக்கை ஆகும்.

இராணுவ ஆட்சி முறையை செயல்படுத்துவதால் பர்மாவின் இராணுவம் அதிக பலம் பெற்று இருக்கிறது. இராணுவத்தினர் வயல்களில் உள்ள பயிர்களை அழிப்பதோடு, நெற் களஞ்சியங்களையும் எரித்து விடுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் பல கிராமங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அங்குள்ள ஆண் மற்றும் பெண்களை சுமை தூக்கும் தொழிலாளர்களாகவும் துப்புரவு செய்யும் தொழிலாளர்களாகவும் மாற்றுகின்றனர். இவ்வாறு பல காரணங்களால் 3,00,000-க்கும் அதிகமானவர்கள் இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து சென்றுள்ளனர்.

மக்கள் பாதுகாப்பாக நெல் பயிரிட்டு அறுவடை செய்ய முடியாத காரணத்தால் உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மக்களின் ஆரோக்கிய நிலையும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இலகுவாக மருத்துவம் செய்யக்கூடிய மலேரியா போன்ற நோய்களாலும் மக்கள் இறக்கின்றனர்.



**எல்லையோர முகாம்களில் உள்ள அகதிகள்:**

பர்மாவின் அகதி முகாம்கள் தாய்லாந்து, இந்தியா, மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் எல்லைப் பகுதிகளில் உள்ளது. 1975-ல் முதன் முதலாக 'கரன்' இனத்தை ஒருவர் தாய்லாந்துக்கு அகதியாக சென்றார். பின்னர் 1980-82-ல் அதிகப்படியான வன்முறை காரணமாக அதிகளவில் அகதிகளாக சென்றனர். 1995-ல் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலால் மேலும் அதிகமான பர்மியர்கள் அகதிகளாக தாய்லாந்துக்கு சென்றனர். தற்போது தாய்லாந்தில் உள்ள 7 முகாம்களில் 1,10,000 பர்மா அகதிகள் உள்ளனர்.

தாய்லாந்து பர்மா எல்லையில் உள்ள அகதிகள் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனெனில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகள் பற்றிய கொள்கையில் தாய்லாந்து இன்னும் கையெழுத்திடவில்லை. எனவே ஐ.நா. அகதிகள், மனித உரிமை அமைப்பின் மூலம் இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடிவதில்லை.

அகதிகள் முகாம்களில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய பல சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு தாய்லாந்து அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் மூலம் அகதிகளுக்கு உணவு, மருத்துவ வசதி மற்றும் கல்வி கற்க உதவும் பொருட்கள் கொடுக்கப்பட்டாலும்



படிப்பகம்

www.padippakam.com

அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியவில்லை. வெகு சிலர் மட்டுமே வேலை செய்து குறைந்த அளவில் வருவாய் பெறுகின்றனர்.

பல அகதிகள் தன்னார்வத்துடன் சமுதாயப்பணிகளில் ஈடுபடுகின்றனர். கட்டிட வேலைகளிலும், சாலைகளை பழுதுபார்க்கும் வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் அகதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியிலும் ஈடுபடுகின்றனர். இவர்கள் சம்பளம் பெறுவதில்லை.

பல அகதி முகாம்கள் மலைப் பகுதிகளில் போக்குவரத்து, தொடர்பு சாதனங்கள் இல்லாமல் தனித்து உள்ளன. தாய்லாந்து நகரப் பகுதிகளிலிருந்து 2 மணி முதல் 4 மணி நேரம் பயணம் செய்துதான் அகதிகள் முகாம்களை அடையமுடியும். கிராமங்களுக்கு அருகில் இருப்பதால் சில அகதிகள் விவசாயத் தொழில்களை செய்து மிகக்குறைந்த சம்பளமே பெறுகின்றனர்.

இந்நிலையில் பெரும்பாலான அகதிகள் அடிப்படைத் தேவைகளான சோப்புகள், துணிகள், சமைக்கும் பாத்திரங்கள், நீர் கொள்கலன்கள், பாய்கள், மெழுகுவர்த்திகள் மற்றும் விளக்கு எண்ணெய் ஆகியவற்றைக் கூட பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அகதிகள் அருகிலிருந்த காடுகளிலிருந்து மூங்கில் மரங்களை வெட்டி வீடுகளை சரிசெய்யும் தொழில்களில் ஈடுபட்டனர். ஆனால் தற்போது தாய்லாந்து அரசாங்கம் தலையிட்டு ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு 15 மூங்கில் மரங்களை மட்டுமே கொடுக்கின்றது.

பல அகதி முகாம்களின் மேற்கூரைகள் ஓலைகளால் மூட அனுமதிக்கப்படாத காரணத்தால் முகாம்களின் மேற்கூரைகள் பிளாஸ்டிக் பையினால்தான் கடந்த 5 ஆண்டுகளாகவே உள்ளது.

அகதிகளுக்காக கல்வி நிலையங்கள் உள்ளன. ஆசிரியர்கள் அனைவரும் அகதிப் பெண்களாகவும் இவர்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் குறைந்த அளவில் சம்பளமும் பெறுகின்றனர்.

அகதி முகாம்கள் உள்ள கல்வி நிலையங்கள் மிகச் சிறிய அளவிலும் இதில் அதிகப்படியான மாணவர்களும் படித்து வருகின்றனர். கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்திக்கொள்ள தாய்லாந்து அரசாங்கம் வாய்ப்பு அளிக்காத காரணத்தால் கல்வியின் நிலை மிக மோசமாகவே உள்ளது.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு அகதி முகாமிலும் சிறிய கிளினிக் ஆரம்பித்து மருத்துவ வசதிகளை



படிப்பகம்

www.padippakam.com

அளித்து வருகின்றன. அகதிகள் பெரும்பாலும் மலேரியா, காசநோய், சுவாச தொற்று, இரத்தசோகை, வயிற்றுபோக்கு போன்ற நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மிக மோசமான நிலையில் உள்ள அகதிகள் தாய்லாந்து மருத்துவமனைக்கு அனுப்பப் படுகின்றனர்.

'கரன்' அகதி முகாம்கள் கரன் அகதிகள் குழுவின் கீழ் உள்ளன. இக்குழு தாய்லாந்து அரசாங்க அலுவலர்களையும் சர்வதேச தொண்டு நிறுவனங்களையும் சந்தித்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்கிறது.

ஒவ்வொரு முகாமிலிருந்தும் ஒரு தலைவர், செயலாளர் மற்றும் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு சமூக பிரச்சினை போக்குவரத்து வசதி, கல்வி, நீதி, பெண்கள் மற்றும் இளைஞர்களை மேற்பார்வையிட அனுமதிக் கின்றனர். தலைவர் மற்றும் செயலாளர் ஓட்டெடுப்பின் மூலம் 2 வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**பெண்களின் அமைப்புகள்:**

பல பெண்கள் அமைப்புகள் அகதி முகாம்களில் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இவர்களின் முக்கிய நோக்கமே பெண்களுக்கு அதிகாரமளித்து அவர்களை சமுதாயத்தில் முன்னேற்ற வேண்டும் என்பதே ஆகும்.

**'கரன்' பெண்கள் அமைப்பின் முக்கிய நோக்கம்:**

- பெண்கள் பல அடக்கு முறைகளிலிருந்து விடுவித்தல்
- கல்வி மற்றும் பொது வாழ்வில் பெண்களின் அதிகாரத்தை முன்னேற்றுதல்
- சுதந்திரத்திற்காககவும், சம நிலைக்காகவும் போராடுவதற்கு பெண்களை ஊக்குவித்தல்
- பெண்களின் அறிவையும் திறமையையும் முன்னேற்றுதல்
- ஆண்களுக்கு சமமாக பெண்களின் உரிமைகளை அடையச் செய்தல்
- 'கரன்' பாரம்பரியத்தை காப்பாற்றி முன்னேற்றம் அடையச் செய்தல்.

'கரன்' பெண்கள் அமைப்புகள் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து எவ்வித சம்பளமும் இல்லாமல் தங்கள் சமுதாயத்தை முன்னேற்ற பாடுபட்டு வருகின்றனர்.

தற்போது கரன் அகதிகள் முகாம்களில் உள்ள சமுதாய அங்கத்தினர்களுக்கு சமுதாய மேலாண்மை திறமையும், அரசியல் பற்றிய பொது அறிவும், பயிற்சிகளும், சட்டங்கள் பற்றிய செய்திகளும் தேவைப்படுகிறது. இதனை கொடுப்பதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

Burmese refugees in Thailand

www.padippakam.com

# குடிபெயர் தொழிலாளர் ஆசியக் கருத்தரங்கம்

தாய்லாந்து நாட்டில் மாய்சோட் என்ற இடத்தில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கம் ஒன்று கடந்த அக்டோபர் 5-ம் தேதி முதல் 9-ம் தேதிவரை 5 நாட்கள் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், வியட்நாம், கம்போடியா, இந்தோனேசியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், மலேசியா, பர்மா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து தொண்டு நிறுவன தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கம் மலேசியாவில் உள்ள 'கேரம் ஆசியா' என்ற அமைப்பின் மூலம் நடத்தப்பட்டது.

'கேரம் ஆசியா' என்ற அமைப்பின் தலைவி திருமதி. ஐரீன் பெர்ணாண்டஸ் கூறும் போது 10 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் ஆசிய நாடுகளில் ஒரு நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்கு சென்று வேலை செய்கின்றனர் எனக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் வெளிநாடுகளில் சென்று பணிபுரியும் தொழிலாளர்கள் உடல்ரீதியாக துன்புறுத்தப் படுவதோடு அடிமையாக,



தாய்லாந்து தொழிலாளர் நல அமைச்சரிடம் பர்மியத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கோரிய ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள்.



படிப்பகம்

www.padippakam.com



**வெளிநாட்டு தொழிலாளர்களை மனித உரிமை மீறல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தொண்டு நிறுவனங்கள் வழி வகுக்க வேண்டும்**

குறைந்த சம்பளத்தில் மனித உரிமைகளை மீறும் விதமாக பணிபுரிகின்றனர் எனக் கூறினார். வெளிநாட்டு தொழிலாளர்களை மனித உரிமை மீறல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தொண்டு நிறுவனங்கள் வழி வகுக்க வேண்டும் எனவும் கூறினார்.

இக்கருத்தரங்கத்தின் போது வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு எவ்வாறு உதவி செய்ய வேண்டும் என்ற வழிமுறைகள் அடங்கிய கையடக்க புத்தகமும் வெளியிடப்பட்டது.

இக்கருத்தரங்கம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் அக்டோபர் 4ஆம் தேதி அன்று தாய்லாந்தில் உள்ள மாய்சோட் என்ற இடத்தில் 144 பர்மா தொழிலாளர்கள் சம்பளம் சரியாக கொடுக்கப்படாத காரணத்தால் வேலை நிறுத்தம் செய்தனர். இதனை பற்றிய தகவல்களை விசாரனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தாய்லாந்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடம் தொண்டு நிறுவனங்கள் கேட்டுக்கொண்டன.

இக்கருத்தரங்கத்தில் இந்தியாவிலிருந்து அமைதி அறக்கட்டளை தலைவர் ஜே.பால்பாஸ்கர் கலந்து கொண்டார்.

Conference on Migrant`s Rights organised by CARAM ASIA in Thailand.



படிப்பகம்

www.padippakam.com

Kadal Kadantha Thozhilali

*A Quarterly Tamil Newsletter on Migrant Workers Rights*




# குடிபெயர் தொழிலாளர் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் அமைதி அறக்கட்டளையின் புதிய, ஆங்கில வெளியீடு

**கடல் கடந்த தொழிலாளி**

அமைதி அறக்கட்டளையின் குடிபெயர் தொழிலாளர் உரிமை மையம் சார்பில் இலாப நோக்கமற்ற முறையில் காலாண்டிதழாக தனிச்சுற்றாக வெளியிடப்படுகிறது.

தொடர்பு முகவரி:

**அமைதி அறக்கட்டளை**

காவலர் குடியிருப்பு அருகில், திருச்சி சாலை,
திண்டுக்கல் - 624 005 தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி: 0451 - 410021 தொலைநகல்: 0451 - 410372
மின்னஞ்சல்: peacetrust@vsnl.com

Published By Migrant Rights Cell, PEACE TRUST, Near Police Colony,
Trichy Road, Dindigul- 624005. TamilNadu, India.
Phone: 0451- 410021 Fax: 0451- 410 372 Email: peacetrust@vsnl.com

படிப்பகம்